தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

செவ்வாய்க்கிழமை, 1974 ஏப்ரல் 23.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 3-30 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Madras Metropolitan Development Plan

*325 Q—Thiru C. R. KOLAPPA (on behalf of Thiru M. SANKARALINGAM) : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the twenty years scheme of Madras Metropolitan Development Plan, 1971-91 has been taken up for implementation;

(*b*) if so, the estimated expenditure of the Scheme;

(*c*) the expenditure incurred up to 31st December 1973: and

(*d*) whether there is Central financial assistance for the Scheme?

சென்னை மாநகர் அபிவிருத்தித் திட்டம்

திரு. சி. ஆர். கோலப்பா (திரு. எம். சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகர் அபிவிருத்தி 20 ஆண்டு திட்டம் (Madras Metropolitan Development Plan) 1971-91 செயல்படத் தொடங்கி விட்டதா?

(இ) ஆமெனில், அத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு என்ன?

(உ) 31—12—1973 ஆம் நாள் வரை எவ்வளவு செலவு செய்யப்பட்டிருக்கிறது?

(எ) இத்திட்டத்திற்கு மத்திய நிதி உதவி ஏதும் உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) செயல்படுத்த வேண்டியதற்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பமாகிவிட்டன.

(இ) 1971-ம் ஆண்டு திட்ட அறிக்கை மதிப்பீட்டின்படி எல்லாத் துறைகளிலும் ரூ. 938 கோடி ஆகலாம் என கணிக்கப்பட்டுள்ளது.

(உ) ஆரம்ப பணியாளர்களுக்கும் அவர்கள் சம்பந்தப்பட்ட இதர சில்லரை செலவினங்களுக்கும் 31-12-1973 வரை ரூ. 4.059 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

(ஏ) திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு இதுவரை மத்திய நிதி உதவி ஏதும் பெறப்படவில்லை.

Cholera

* 326 Q.—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) the total number of deaths, District-wise, in Tamil Nadu due to Cholera in 1973;

(*b*) whether it is a fact that the incidence of Cholera is to some extent high during this year; and

(*c*) if so, the reasons therefor?

காலரா நோய்

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1973-ஆம் ஆண்டில், தமிழகத்தில் காலரா நோயினால் இறந்தவர்கள், மாவட்ட வாரியாக, எத்தனை பேர்?

(இ) காலரா நோய் இவ்வாண்டு சிறிது மிகுந்திருக்கிறது என்பது உண்மையா?

(உ) ஆமெனில், அதற்குக் காரணம் யாது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ), **(இ) & (உ)** விவர அறிக்கை **@** ஒன்று மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, முனிசிபல் நகரங்களில் காலரா நோய் அதிகமாக இருக்கிறதா அல்லது கிராமப்பகுதிகளில் அதிகமாக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கேள்வி தெளிவாகக் காதில் விழவில்லை. மீண்டும் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.

@ 132 ஆம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.